06.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.43/2021</u>

அ.சா.13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமூர்த்தி | | |
| த/பெ | திவான்சாமி | | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | கண்டமங்கலம் | வயது | 29/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது நெட்டப்பாகத்திலுள்ள எம்ஆர்எப் டயர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனக்கு ராஜ்கினை தெரியும். அவரது தாயார் அம்மா வாசுகியை (அ.சா.1 ) தெரியும். ஆஜர் எதிரிகள் சசி என்கிற கஸ்தூரி, கலா இருவரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். இருவரையும் எனக்கு தெரியும். எதிரி தீபக் என்கிற தீபக்ராஜ், ஆஜர் எதிரி லட்சுமணன் ஆகியோரை எனக்கு தெரியாது. ராஜ்கிரன் தற்போது இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். எப்படி இறந்தார் என்று தெரியவில்லை. நான் சம்பவ காலத்தில் கிருஷ்ணகிரியில் இருந்ததால் இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் வந்த பிறகு ராஜ்கிரனின் பிரேதம் தண்டவாளத்தில் கிடந்தது என்றும், அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. ராஜ்கிரன் மற்றும் அவரது மனைவி சசி என்கிற கஸ்தூரியும் ஒற்றுமையாக வாழ்ந்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததற்கு சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ராஜ்கிரனுக்கும், சசி என்கிற கஸ்தூரிக்கும் திருமணம் நடந்தது என்றும், அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தார்கள் என்றும், சசிக்கும், ராஜ்கிரனுக்கும் அடிக்கடி குடும்ப தகராறு இருந்து வந்தது என்றும், சம்பவத்திற்கு 1 வருடத்திற்கு முன்பு வளவனூரைச் சேர்ந்த தீபக் ராஜ் (1ம் எதிரி) என்பவருடன் சசி என்பவர் கள்ளத்தொடர்பு ஏற்பட்டு வீட்டைவிட்டு ஓடிவிட்டார் என்றும்,. பின்பு சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு வீடு திரும்பினார் என்றும், வந்தபிறகும் தினமும் சண்டை சச்சரவு நடந்து வந்தது என்றும், இந்த நிலையில் கடந்த 13.04.2019ந் தேதியில் காலை சுமார் 6 மணியளவில் பள்ளிநேலியனூர் ரயில்வே கேட் பாண்டிச்சேரி ரோட்டிலுள்ள ரயில்வே பாதையில் ராஜ்கிரனின் பிரேதம் கிடப்பதாக தகவல் கிடைத்தது என்றும், நானும், ராஜ்கிரனின் அம்மாவும், ஊர்க்காரர்களும், சென்று பார்த்தோம் என்றும், அப்போது ராஜ்கிரன் தலையில் காயங்களுடன் இறந்துகிடந்தார் என்றும், வந்து பார்க்க ராஜ்கிரனின் மனைவியும், அவரது மாமியாரும், குழந்தைகள் வீட்டில் இல்லை என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆனால் அன்று அதற்கு முன்பு 2.30 மணிக்கு ராஜ்கிரன் வீட்டில் குழந்தைகள் அழும் சத்தம் கேட்டது என்றும், நானும் எனது அம்மாவும் வெளியே வந்து பார்க்க தீபக்ராஜ்யும், மற்றொருவரும் ராஜ்கிரனின் மோட்டார் சைக்கிளில் இரண்டு பேருக்கு நடுவில் பாயில் சுற்றி எதையோ எடுத்து சென்றார்கள் என்றும், அதை நானும் என் அம்மாவும் பார்த்தோம் என்றும், தீபக்ராஜ் மீது நிறைய கொலை வழக்கு இருந்ததால் பயந்துக்கொண்டு நாங்கள் வெளியில் சொல்லாமல் இருந்தோம் என்றும், சொன்னேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் அனைவரும் சதிதிட்டம் தீட்டி ராஜ்கிரனை கோடாரியால் வீட்டில் வைத்து தலையில் வெட்டி கொலை செய்து பிரேதத்தை பாயில் சுற்றி எடுத்து சென்று ரயில் பாதையில் போட்டுள்ளார்கள் என்ற விவரம் எதிரிகள் தீபக்ராஜ், கஸ்தூரி இருவரும் ஆழியூர் கிராமநிர்வாக அலுவலர் முன்னிலையில் ஆஜராகி இது சம்மந்தமாக வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் மேற்படி விவரங்களை சொல்லிக்கொண்டேன் என்றும், தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறுவிசாரணை**

**இல்லை.**